அதிகாரம் இருக்கிறது, மாநில அரசுக்கு இல்லை என்பதை நான் அதை ஏற்றுக் கொள்ள முடியாது என்று சொன்னார்கள். அதைத்தான் நாம் அனைவரும் சொல்லிக் கொண்டிருக்கிறோம். மத்திய அரசின் அதிகாரங்கள் இன்னும் பரவலாக வர வேண்டும் என்றுதான் நாம் எல்லோரும் சொல்லிக் கொண்டிருக்கிறோம். ஆனால் இருக்கிற நிலையை வைத்து இப்போது நாம் நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறோம்.

3. ஒழுங்குப் பிரச்சினைகள்—தொடர்ச்சி.

(ஆ) உறுப்பினர்களது விடுதி அறைகளில் ஒட்டப் பெற்ற விதி முறைகள்.

திரு. கு. ரமணி : பாயின்ட் ஆப் ஆர்டர். 1980 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 17ஆம் நாளன்று எங்கள் ஹாஸ்டல் ரூம்களுக்கு முன்னால் ஒரு நோட்டீஸ் ஒட்டப்பட்டதைப் பற்றி இங்கே நாங்கள் விவரங்கள் தெரிவித்து அவை முன்னவர் அவர்கள் அதற்காக வருத்தம் தெரிவித்து வாபஸ் பெற்றுக் கொண்டார்கள்......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஹாஸ்டல் சம்பந்தப்பட்ட விஷயங்களை என் அறைக்கு வந்து பேசுங்கள்.

திரு. கு. ரமணி : சில விஷயங்களைத்தான் அறையில் வந்து பேசலாம்.........................

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நேற்றே இதைப் பற்றி அரைமணி நேரம் பேசினோம். ஹாஸ்டல் சம்பந்தப்பட்ட விஷயங்களை என் அறைக்கு வந்து பேசுங்கள்.

திரு. கு. ரமணி : தலைவர் அவர்களே; அந்த நோட்டீசைக் கொண்டு போய் ஒட்டிய அந்த ஊழியர் டிஸ்மிஸ்செய்யப்பட்டிருக்கிறார். அவர் க்ரவுண்ட் புளோரிலே வேலை செய்யக் கூடிய ஊழியர்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இன்னும் டிஸ்மிஸ் ஆகவில்லை. இதைப்பற்றி நேரடியாக வந்து என் அறையிலே பேசுங்கள் என்றுதான் சொல்கிறேன். ஆபீஸ் சம்பந்தப் பட்டவைகளை அங்கே பேசலாம். அதற்காகத் தான் அலுவல் ஆய்வுக் குழு போட்டிருக்கிறோம்.

[1980 ஜூலை 19

திரு. கு. ரமணி : நான் சொல்வது, அந்த நபர் டிஸ்மிஸ் செய்யபட்டிருக்கிறார். என்னிடத்திலேயே சொல்லப்பட்டது. அந்த நிலை ஏற்பட்டிருக்கிறது. இதைப்பற்றி விசாரித்து, தகுந்த பாதுகாப்பு கொடுக்க வேண்டும். இன்னொரு விஷயம். இந்த நோட்டீஸ் ஒட்டப்பட்ட பிரச்னை வாபஸ் வாங்கப்பட்டது. இது உங்களுக்குத் தெரியும். நீங்களே உத்தரவு போட்டிருக்கிறீர்கள். ஆனால் நிலைமை என்ன? அந்த நோட்டீஸ் இன்னும் எடுக்கப்படவில்லை. என் அறையின் கதவிலே 4 காகிதங்கள் ஒட்டப்பட்டிருக்கின்றன. அதுவும் கதவின் பின்னாலே ஒட்டப்பட்டிருக்கிறது. நான் அறைக்குள் இருக்கும் போதெல்லாம் அதைப் பார்க்கக் கூடிய ஒரு தண்டனை கொடுக்கப்பட்டிருக்கிறது. அந்தக் காகிதம் இன்னும் அப்படியே இருக்கிறது என்பதை உங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பிரச்னை பற்றி அன்றைக்கு தெளிவு பெறாத நிலையில் வந்தது. இந்த நோட்டீஸ் ஒட்டுவது என்பது—சாதாரணமாக பயணியர் விடுதிகளில் எல்லாம்கூட தங்குபவர்கள் கடைப் பிடிக்க வேண்டிய விதிமுறைகள் போடப்பட்டிருக்கும். இதிலே தங்குபவர்கள் பொதுவாக சட்டமன்ற உறுப்பினர்கள் மட்டுமல்ல. நாடாளு மன்ற உறுப்பினர்கள், ஏற்கனவே சட்டமன்ற உறுப்பினர்களாக இருந்தவர்கள், அரசு அதிகாரிகள் போன்றவர்கள் தங்குகிறார்கள். அவர்கள் கடைப் பிடிக்க வேண்டிய விதிமுறைகள் ஏற்கனவே வகுக்கப்பட்டவை. இதிலே நடந்த ஒரே ஒரு தவறு அது அங்கே ஒட்டப்பட்டதாகும். பயணியர் விடுதிகளில் கண்ணாடி போட்டு வைப்பார்கள்; சில இடங்களில் அட்டையில் ஒட்டி தொங்க வைப்பார்கள். இந்த விதிமுறைகள் ஏற்கனவே இருந்த பேரவைத் தலைவர் திரு முனு ஆதி அவர்கள் 5, 6 மாதங்களுக்கு முன் ஏற்றவை. இந்த விதிமுறைகள் ஒட்டப்பட்ட நிலைமையிலேயே தான் ஒரு தவறு இருக்கிறது. தங்குபவர்கள் என்று வருகின்றபோது, அதிலே உறுப்பினர்களையும் இணைக்கின்ற ஒரு தன்மை வருகிறது. உறுப்பினர்களுக்கென்று சில விதிமுறைகள் இருக்கின்றன; தங்குபவர்களுக்கென்று சில விதிமுறைகள் இருக்கின்றன. தங்குபவர்களாக இருந்தால் முன் கூட்டியே பணம் தர வேண்டும். அது தங்குபவர்களுடைய நிலை. ஆனால் உறுப்பினர்களுக்கு அப்படியல்ல. எனவே, இதை இரண்டையும் பார்த்து, இந்த விதிமுறைகளை இணைத்து செயல்பட வேண்டும். இதைப் பொறுத்தவரையில் அன்றைக்கே வாபஸ் பெறப்பட்டது. ஆனால், அன்றைக்கு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் குறிப்பிட்டார்கள். செயலாளர் தனக்குத் தெரியாது என்று சொன்னவுடனே, தெரியாமல் எப்படி

நடந்தது, அதற்குக் காரணமானவர்கள்மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று சொன்னார்கள். இதைப்பற்றி விசாரணை நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இந்த தன்மையிலே, அடிப்படையிலே யார் மீதும் குற்றமில்லை என்றால், யார் மீதும் நடவடிக்கை எடுக்க வேண்டிய அவசியம் இருக்காது. ஆகவே, நிலைமை இந்த அளவிலே இருக்கிறது. மேற்கொண்டு விசாரணை செய்து, உள்ளபடியே தவறு யார்மீது என்று வருகிறதோ அவர்கள்மீது நடவடிக்கை எடுக்கப்படும். இதிலே ஒரு கிளாரிபிகேஷன், தெளிவு ஏற்பட வேண்டும். காரணம். உறுப்பினர்களுக்கு என்னென்ன விதிமுறைகள், தங்குபவர்களுக்கு என்னென்ன விதிமுறைகள் என்று இரண்டையும் தனித் தனியாக பார்த்து இதிலே தெளிவடைய வேண்டும்.

(3) ஒழுங்குப் பிரச்சினை—தொடர்ச்சி.

(இ) உறுப்பினர்கள் கோரும் தகவல்கள் கொடுக்கப்பெறுவது.

* திரு. வி. கிருஷ்ணமூர்த்தி : பாயிண்ட் ஆப் ஆர்டர், சார். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாங்கள் அடுத்து இந்த மானியக் கோரிக்கையை எடுத்துக்கொள்ள இருக்கிறீர்கள். உறுப்பினர்களுக்கு சில பாதுகாப்புகள் வேண்டி தங்களுடைய அனுமதியைக் கோருகிறேன். இந்த தொழில் மானியத்திலே எங்கள் கட்சியின் சார்பிலே இரண்டு பேர்கள் பேச இருக்கிறோம். நானும் பேச இருக்கிறேன். இதிலே பேசுவதற்கு பாலிசி நோட் கொடுத்திருக்கிறார்கள். இல்லாத சில விஷயங்களை உண்மைகளை நாங்கள் கோரிப் பெறுவதற்கு எங்களுக்கு பொறுப்பும். உரிமையும் இருக்கிறது. அந்த ''fact'' ஐ வைத்துக்கொண்டு தான் பேசுவோமே தவிர, fact இல்லாமல் பேச முடியாது. ஆகவே, நீங்கள் சட்டமன்றத் துறையின் மூலமாக அந்தந்த இலாகாவிற்கு எழுதி கேட்டால், சாதாரணமாக கொடுப்பது வழக்கம். நம்முடைய அவை முன்னவர் அவர்கள்கூட விவாதத்திற்குப் பதில் அளிக்கின்றபோது சமீபத்திலே மேலவையிலே பேசினார்கள். இந்த மன்றத்தில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பதில் சொன்னார்கள்.

[முற்பகல் 10–20].

அசோக் லேலண்ட் எக்ஸ்பான்ஷன் சம்பந்தமாக சில புள்ளி விவரங்களைக் கொடுத்தார்கள். எவ்வளவு கோடி ரூபாய் இன்வெஸ்ட்மென்ட் செய்ய இருக்கிறார்கள், எவ்வளவு ஆயிரம் பேருக்கு வேலை கிடைத்திருக்கும் போன்ற அடிப்படை உண்மைகளைத் தெரிவித்தால் எங்களுக்கு உதவியாக இருக்கும். அதை வைத்துப் பேச உதவியாக இருக்கும். சட்டசபை செயலாளரிடம் கேட்டேன். இன்டஸ்ட்ரிஸ் செக்ரடரிக்கு எழுதி உடனடியாக